NOOLAHAM FOUNDATION
நூலக நிறுவனம்

# சாவகச்சேரி ஊர் ஆவணப்படுத்தல் செயற்றிட்டம்







| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | சாவகச்சேரி ஊர் ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | |
| செயற்றிட்ட இடம் | சாவகச்சேரி, யாழ்ப்பாணம் |
| செயற்றிட்ட காலம் | 12 மாதங்கள் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | |
| முக்கிய பங்குத்தாரர்கள் | |
| பாதீடு (Budget) | மொத்தப் பாதீட்டுத்தொகை - 3,189,419<br>நூலகப் பாதீட்டுத்தொகை - 1,011,700<br>நன்கொடையாளர் பாதீட்டுத்தொகை - 2,177,719 |

அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டு

செயற்றிட்ட சுருக்கம்

ஊர் ஆவணப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது நூலக நிறுவனத்தின் வீயூகதிட்டத்துக்கமைய அடையாளங்காணப்பட்ட முன்னெடுப்பு. ஒரு ஊர் தொடர்பான பல்வேறு தகவல் வளங்களை, தரவுகளை சேகரித்து, பாதுகாத்து, காட்சிப்படுத்தி அந்த ஊர் தொடர்பான கல்விசார் மற்றும் சமூகம் சார் ஆய்வுகளுக்கு உதவுவதுடன் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவுதல் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

இனவரையியில் அடிப்படையில், ஊர் தொடர்பில் சேகரிக்கப்படவேண்டிய தகவல்கள், தரவுகள் பற்றிய ஒரு சட்டகம் (வார்ப்புரு) விஞ்ஞான தன்மையான முறையியலின் ஊடாக உருவாக்கப்பட்டு கிராமம் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன. அந்தவகையில் முதலாம் நிலை தரவுகள் வாய்மொழி வரலாறு, விடய ஆய்வு, நேர்காணல், குவிமையக்குழு கலந்துரையாடல், காணொளிகள் ஊடாகவும். இரண்டாம் நிலை தரவுகள் புத்தகங்கள், ஆய்வுகள், ஒளிப்படங்கள், கிராமம் தொடர்பான ஏனைய வெளியீடுகள் ஊடாகவும் சேகரிக்கப்படும்.

கிராமங்களின் பெறுமதியான பண்பாட்டு கூறுகளை வெளிப்படுத்தல் மற்றும் வளங்களை நீண்ட காலம் பயன்படக் கூடிய வகையில் பாதுகாத்துப் பகிர்வதற்கான ஆவணப்படுத்தல் முறைகளையும் நாம் உருவாக்கி கிழக்கிலும் வடக்கிலும் சில ஊர்களை தேர்தெடுத்து முன்மாதிரிச் செயற்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் பண்பாடு மற்றும், பாரம்பரியம் என்பவற்றை கட்டிக்காப்பதில் முக்கிய பங்குவகிக்கும் பல ஊர்களின் வரிசையில் ஒன்றாக திகழும் சாவகச்சேரி ஊரின் சிறப்பம்சங்களை ஆவணப்படுத்துவது அத்தியாவசியமானதொன்றாக காணப்படுகின்றது.

அறிமுகமும் பின்புலமும்




சாவகச்சேரி இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள ஒரு நகரமாகும். இது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தென்மராட்சி எனும் பிரிவில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து A9 வீதியூடாக தென் இலங்கை (கொழும்பு) நோக்கிப் பயணிப்பவர்கள் சாவகச்சேரியைக் கடந்துதான் செல்ல வேண்டும். இலங்கை தொடரூந்து வலையமைப்பில் நாவற்குழி, மீசாலை தொடருந்து நிலையங்களுக்கிடையில் சாவகச்சேரி அமைந்துள்ளது.

தென்மராட்சி இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தின் நான்கு பெரும் பிரிவுகளுள் ஒன்று. ஏனையவை வடமராட்சி, வலிகாமம், தீவகம் ஆகியன. தென்மராட்சிக்கு மேற்கே வலிகாமமும், வடக்கே வடமராட்சியும், தெற்கே யாழ்ப்பாணக் கடலேரியும், கிழக்கே கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பிரிவான பச்சிலைப்பள்ளியும் உள்ளன.

தென்மராட்சியின் தலைநகரம் சாவகச்சேரி ஆகும். சாவகச்சேரி நகரம் சாவகச்சேரி நகர சபையினால் நிர்வாகம் செய்யப்படுகிறது. மீசாலை, கைதடி, வரணி, மட்டுவில், கொடிகாமம், கச்சாய் போன்றவை தென்மராட்சியில் உள்ள ஊர்களில் சிலவாகும்.

சாவகச்சேரி நகரத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, வெளிநாடுகளின் ஒரு நகரம் போல அனைத்தையும் தன்னகத்தே குறிப்பிட்ட சுற்றளவிற்குள் அமையப்பெற்ற ஒரு நகரம் என்று சொல்ல முடியும். ஆலயங்கள், தேவாலயங்கள், பிரபல பாடசாலைகள், தொடரூந்து நிலையம், பேருந்து நிலையம், மிகப் பெரிய சந்தை, கடைகள், கலாச்சார மண்டபம், வங்கிகள், நீதிமன்றம், காவல் நிலையம், தபால் நிலையம், ஆதார வைத்தியசாலை, திரையரங்கு, மயானம், நகராட்சி மன்றம், பிரதேச சபை என அனைத்தும் ஒரு குறிப்பிட்ட தூரத்திலேயே அமையப்பெற்ற நகரம் என்றால் மிகையாகாது.

யாழ் மாவட்டத்தில் பரந்ததொரு நிலப்பரப்பை உள்ளடக்கியதும், தனித்துவமான பல பண்புகளைக் கொண்டதுமாக தென்மராட்சிப் பிரதேசம் உள்ளது. இம் மாவட்டத்தின் பொருளாதாரத்தில் கணிசமான பங்களிப்பினை வழங்குவதாக இப்பிரதேசம் உள்ளது. நெல், பழவகை, தென்னை மரங்கள் மற்றும் பனை மரங்கள் என்பன அதிகளவில் இங்கு செய்கை பண்ணப்படுகிறது. வானுயர்ந்த மரங்களும், வளமுடைய நிலங்களும், நீர் நிலைகளும், பச்சைப் பசேலென வயல் வெளிகளுமெனப் பேரெழில் பெற்று விளங்குகின்றது இப் பிரதேசம்.

தென்மராட்சிப் பிரதேசம் 232.19 சதுர கிலோமீட்டர்கள் பரப்பைக் கொண்டு யாழ் மாவட்டத்தில் மிகப்பெரிய பிரதேசமாகக் காணப்படுகிறது. அதாவது மாவட்டத்தின் 22.5% நிலப்பரப்பை தன்னகத்தே கொண்டதாக உள்ளது. தென்மராட்சி பௌதீக ரீதியாக சமதரைப் பாங்கானதாகக் காணப்படுவதுடன் பெரும்பாலான பகுதிகளில் மணல் மண் மேற்பரப்பாக காணப்படுகிறது. இங்கு ஆறுகளோ மலைகளோ காணப்படாத போதிலும் பற்றைக் காடுகளும் சிறுகுளங்களும் காணப்படுகின்றன. யாழ் குடாநாட்டின் பாறை அமைப்பிற்கேற்றவாறு இப்பிரதேசத்தில் தரைக்கீழ் நீர்வளமே உள்ளது. எனினும் சில பகுதிகளில் கனியங்களின் செறிவு காரணமாக நீர் பழுப்பு நிறங்கொண்டதாகவும் அடர்த்தி கூடியதாகவும் உள்ளது. இப்பிரதேசத்தின் சில பகுதிகளில் செம்மண் தொகுதியும் காணப்படுகிறது.

தென்மராட்சிப் பிரதேச செயலகமானது 60 கிராம சேவகர் பிரிவுகளையும் 130 கிராமங்களையும் கொண்டமைந்துள்ளது. மேலும் இப்பிரதேசம் சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேசசபை என்ற இரு உள்ளூராட்சி அலகுகளை உள்ளடக்கி உள்ளது. இதில் சாவகச்சேரி நகரசபை 11 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி 31.29 சதுர கிலோமீட்டர்கள் பரப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. மிகுதி 49 கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்ட 200.90 சதுர கிலோமீட்டர்கள் பரப்பு சாவகச்சேரி பிரதேச சபைக்குள் அடங்குகிறது. தென்மராட்சிப் பிரதேச செயலகம் சாவகச்சேரி தேர்தல் தொகுதிக்குள் அடங்குகிறது.

தென்மராட்சிப் பிரதேசமானது இலங்கையின் உலர் வலயத்தில் காணப்படுகிறது. அத்துடன் நவம்பர் தொடக்கம் சனவரி வரையான மாதங்களில் வடகிழக்குப் பருவ மழைவீழ்ச்சியினைப் பெற்றுக் கொள்கிறது. இம் மழைவீழ்ச்சியானது நெற்பயிர்ச் செய்கைக்கும் நிலத்தடி நீர் சேகரிப்பிற்கும் உதவியாக உள்ளது. இவ்வாறு சேகரிக்கப்படும் நீர் ஏனைய பருவகாலங்களில் கிணறுகளின் மூலம் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இப் பிரதேசமானது யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியில் பிரதான பங்கு வகிக்கிறது. இதனால் யாழ் மாவட்டத்தின் உணவுக் களஞ்சியம் என்றும் அழைக்கப்படுகிறது. இப் பிரதேசம் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் என்பவற்றிற்குப் பெயர் பெற்ற இடமாக

விளங்குகிறது. இங்கு தென்னை வளமும் மற்றும் பனை வளமும் காணப்படுகிறன. அத்துடன் கடந்த கால யுத்தத்தினால் பெருமளவு தென்னை, பனை மரங்கள் அழிவடைந்துள்ளன. இங்கு பெருமளவு நெல் சாகுபடி செய்யப்படுவதுடன் தானியங்களும் மரக்கறிகளும் பயிரிடப்படுகின்றன. கோடை காலங்களில் கிணற்று நீரைப்பயன்படுத்தி பயிற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

தென்மராட்சிப் பிரதேசமானது யாழ் மாவட்டத்தினை ஏனைய மாவட்டங்களுடன் இணைக்கும் A9 வீதியினையும் உள்ளடக்குகிறது. அத்துடன் கொடிகாமம் – பருத்தித்துறை வீதி, சாவகச்சேரி- பருத்தித்துறை வீதி, மீசாலை – புத்தூர்ச்சந்தி வீதி, கேரதீவு ஊடாக சாவகச்சேரி-பூநகரி வீதி ஆகிய பிரதான வீதிகளையும் கொண்டுள்ளது.

செயற்றிட்டத்துக்கான நியாயப்பாடு

யாழ்ப்பாண பண்பாட்டு பாரம்பரியத்தின் முக்கிய மையங்களுள் ஒன்றாக சாவகச்சேரி காணப்படுகின்றது. கல்வி, விவசாயம், தொழில் நடவடிக்கை மற்றும் கலை பண்பாட்டு ரீதியாக முக்கிய அம்சங்கள் நிறைந்த இடமாக விளங்குகிறது. சாவகச்சேரி தன்னகத்தே பல்வேறு வரலாற்றுச்சிறப்பு மிக்க ஆலயங்களையும் , தேசிய மற்றும் உயர் தரப் பாடசாலைகளையும் கொண்டுள்ளது.

மேலும் முக்கனிகள் என்று சொல்லப்படும் மா, பலா, வாழைக்கு சாவகச்சேரி மண் பெயர் போனது. அதனால் சாவகச்சேரியை "குழைக்காடு" என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

கச்சாய்க் கடலில் இருந்து கடல் உணவுகள் பெறப்படுகின்றன. அத்தோடு பனங்காய்பினைதல், பனம் பொருள் உற்பத்தி, தம்புக் கைத்தொழில் , நாவற்குழியில் இறால் பதனிடும் நிலையம் என்றுஆங்காங்கே பல கைத்தொழில் ஆலைகள் இயங்கி வந்துள்ளன.பனையடிக்களவயல்,தனங்களப்புவயல். மீசாலை வயல் என நிலங்களுக்கும் குறைவில்லை.

சாவகச்சேரிக்கு பேரும் புகழும் சேர்க்கும் ஆளுமைகள்

1. 1989ல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றும் பாராமன்றம் செல்லாத திரு.அபொ.செல்லையா சாவகச்சேரித் தொகுதிக்கு அணி சேர்த்தவர்களில் ஒருவராவார். தமிழ்மேல் கொண்ட காதலால் "முத்தமிழ் வித்தகர்" ஆகி தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை விழாவாக ஒவ்வொரு ஆண்டும், மாட்டு வண்டியில் ஊர்வலத்துடன் நடாத்த வழி கோலியவர். சாவகச்சேரியில் தமிழ் வாழ வளர திருவள்ளுவர் சிலை சாவகச்சேரி நகரசபை முன்றலில் இவரால் நிறுவப்பெற்று அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

2. தமிழ் இலக்கிய உலகில் புகழ் சேர்த்த பண்டிதமணி கணபதிப்பிள்ளையும் சாவகச்சேரியின் புகழுக்கு காரணமாக திகழ்கிறார்.

3. இலங்கை வானொலியின் மூலம் புளுகர் பொன்னையா நாடகத்தை வானலைகளில் தவழ விட்ட "வரணியூரான்" எனும் அமரர் எஸ்.எஸ்.கணேசபிள்ளை குறிப்பிட்டுச்சொல்ல வேண்டிய ஆளுமைகளுல் ஒருவர்.

4. ஈழவிடுதலைப் போராட்டத்தில் நேதாஜி எனப் போற்றப்பட்ட இராசரத்தினம், கவிஞர்கள் வரிசையில் முருகையா, குமாரசாமி, சின்னத்தம்பி ஆகியோர் மிக முக்கியமானவர்கள்

5. நாதசுவரத்தில் புகழ்பெற்ற பஞ்சாபிகேசன், இசைத்துறையில் மன்றங்கள் அமைத்து பிள்ளைகளுக்கு பாடஞ்சொல்லிய ஆசிரியர்கள் நடேசன், குமாரசாமி எனும் ஆளுமைகள் இசைத்துறைக்கு வலுசேர்த்தோர் ஆவர்.

6. சாவகச்சேரியை சேர்ந்த தாட்சாயணி என்ற புனைபெயரில் எழுதிக் கொண்டிருக்கும் பிரேமினி சபாரத்தினம் ஈழத்து எழுத்தாளர். சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவர். இவர் எழுதியவைகள், பல சிறுகதை, கவிதைப் போட்டிகளில் முதற் பரிசில்களைப் பெற்றிருக்கிறார்.

7. தென்மராட்சி சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட ரவிராஜ் 1987 ஆம் ஆண்டு இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதிவு செய்தார். ரவிராஜின் "ரவிராஜ் அசோசியேட்ஸ்" எனும் சட்ட நிறுவனமானது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகள், அவசரகாலச் சட்டத்தின் கீழான வழக்குகளுக்காக வாதாடியது. கொழும்பில் மனித உரிமைகள் சட்டத்தரணியாகவும் பணியாற்றினார்.

8. ஆனந்தி சூர்யபிரகாசம் (சாவகச்சேரி, யாழ்ப்பாணம்) இலங்கை வானொலியில், சானா சண்முகநாதன் தயாரிப்பாளராக இருந்த காலத்தில் பல வானொலி நாடகங்களில் நடித்தவர். அறிவிப்பாளராகவும் இருந்தார். பின்னர் இங்கிலாந்து குடியேறியபின் 70 களில் பிபிசி தமிழோசையில் பகுதிநேர அறிவிப்பாளராக பணியாற்ற ஆரம்பித்து ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாக அங்கு நிரந்தர அறிவிப்பாளராகவும், நேர்முகம் காண்பவராகவும் பணியாற்றி 2005ல் ஓய்வு பெற்றார். சீர்காழி கோவிந்தராஜனின் இலண்டன் கச்சேரிக்கு இவர் செய்த அறிமுகம் இவரைப் பலருக்கு தெரியவைத்தது. சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் 2006ம் ஆண்டுக்கான தலைவராக ஆனந்தி சூரியப்பிரகாசம் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

9. கல்வயல் வே. குமாரசாமி ஈழத்துக் கவிஞர், கல்வியாளர். சிறுவர் பாடல்கள், கவிதைகள் படைத்துள்ளார். தமிழிலக்கியப் பரப்பில் சிறந்த புலமை கொண்டவர். இவர் இயற்றிய மெல்லிசைப் பாடல்கள் வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. பாலகுமாரன், நந்தா, வாகடனன் போன்ற புனைப்பெயர்களில் எழுதியுள்ளார். இலங்கைப் பத்திரிகைகளில் பல கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளார்.தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் கலைச்சாகரம் விருது , வட மாகாண சபையின் கௌரவ முதலமைச்சர் விருது , கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் காவ்யபிமானி விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.

10. கேமலதா ஹதீபன் இவரின் ஆக்கங்கள் இலங்கையில் வெளிவரும் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளது. யார் எடுத்தது, சுற்றுலா செல்வோமா, ஆ என்ன வெயில், கீச்.. கீச், பட்டு நரி, குண்டு மீனும் குட்டி மீனும் ஆகிய சிறுவர் நூல்களை இவர் எழுதியுள்ளார். மேலும் இவரின் சிறுவர் இலக்கியத்திற்காக இளம் படைப்பாளி இரா. உதயணன் இலக்கிய விருது 2016ஆம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டது.

11. கே. ஆர். டேவிட் ஈழத்து எழுத்தாளர் ஆவார். புதினம், குறும்புதினம், சிறுகதை, உருவகக்கதை, இலக்கிய, அரசியல் ஆய்வு எனப் பல்துறைகளில் எழுதி வருபவர். இலங்கை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1966 ஆம் ஆண்டு முதல் எழுதி வருகிறார். இவரது “எழுதப்படாத வரலாறு” என்ற சிறுகதை தரம் எட்டு தமிழ்மொழியும் இலக்கியமும் பாடநூலில் இடம் பெற்றுள்ளது.[1] சாவகச்சேரி பிரதேச உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

சாவகச்சேரியில் வாரி வனநாதர் ஆலயம், வைரவ கந்தசுவாமி ஆலயம், சப்பச்சி மாவடி விநாயகர் ஆலயம், இத்தியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில், பன்றிதலைச்சி கண்ணகை அம்மன் ஆலயம், சுட்டிபுரம் அம்மன் கோயில், விழுவளை அம்மன் கோயில், தாளையடி அம்மன் கோயில், நுணாவில் களம் அம்மன் கோயில் , தென்னிந்திய திருச்சபை ஆதீனம், சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயம் என பல புகழ் பெற்ற ஆலயங்களும் , தேவாலயங்களும் காணப்படுகிறன.

1. சாவகச்சேரியில் பண்டைநாளில் இருந்த “வாரி வனநாதர்” என்ற பழம்பெருங்கோயில் பிற்காலங்களில் அழிந்திருக்கிறது. சாவகச்சேரியில் இரண்டு சிவன் கோயில்கள் உள்ளன. இவற்றில் மிகத் தொன்மையானது வாரிவனநாதசிவன் கோயிலாகும். போர்த்துக்கேயர் இதனை அழித்தனர். பின்னாளில் வயல் உழும்போது சிவலிங்கம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுக் கோயில் அமைக்கப்பட்டது என்பர்.
2. வைரவசுவாமி கந்தசுவாமி கோவிலென அழைக்கப்படும் .இந்தக் கோவிலை மையப்படுத்தி விளையாட்டுக் கழகம், சன சமூக நிலையம், முன்பள்ளி, அறநெறிப் பாடசாலை போன்றன செயல்படுவதும் குறிப்பிடத்தக்கது. அருட்கவி விநாசித்தம்பி ஐயா அவர்களினால் “குட்டி நல்லூர்” எனச் சிறப்பித்துக் கூறப்பட்ட ஒரு ஆலயமாகும்.
3. சாவகச்சேரியில் அரசடிப்பகுதியில் அமைந்த ஓரிடம் சப்பச்சி மாவடி ஆகும். இங்கு “சப்பச்சிமாவடி விநாயகர் ஆலயம்” அமைந்துள்ளது. தமிழ்நாட்டுக் காஞ்சிமாவடி என்ற தலத்து மாவிதை கொண்டுவரப்பட்டு இங்கு நட்ட மரத்தடியிலேயே கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மாவின் கனி விதையின்றி இருப்பதால் “சப்பச்சி” எனப் பெயர் பெற்றதென்பர். மேலும் பெரிய மாவடி” என்ற வட்டாரமும் இங்குள்ளது. இங்கு பெரிய மாவடிக் கந்தசுவாமி கோவிலும் அமைந்துள்ளது. மரப்பெயரால் இத்தலம் பெயர் பெறுவதாயிற்று.
4. சாவகச்சேரி – சங்கத்தானை இத்தியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் இலங்கையின் வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி, சங்கத்தானை எனும் இடத்தில் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தின் மூலமூர்த்தியாக விநாயகர் எழுந்தருளியுள்ளார். சின்னத்தம்பி நாகமுத்து என்பவர் 1886 ஆம் ஆண்டில் தூபியுடன் கூடிய மண்டபத்தினை அமைத்து கும்பாபிசேகம் செய்ததாகவும் இக்காலத்திலிருந்து கோவில் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து இன்றைய நிலையினை அடைந்தது எனலாம்.
5. மட்டுவில் சாவகச்சேரியில் அமைந்துள்ள பன்றிதலைச்சி கண்ணகை அம்மன் ஆலயம் கண்ணகி வழிபாட்டுடன் அமையப்பெற்ற கிராமிய வழிபாட்டுத்தலமாக முற்காலத்தில் இருந்தது எனவும் தற்போது ஆகம விதிக்கமைய கோயில் மாற்றமுற்று காணப்படுகிறது. அக்காலத்தில் மட்டுவிலில் அமைந்திருக்கின்றன கோயிலில் மாடு வெட்டக்கூடாது.ஆனால் அதனைச்செய்து விட்டார்கள். அன்றைய நிர்வாகம் அதற்குத் தண்டனை வழங்க ஒன்று கூடியபோது அந்தப் பக்தனின் பக்தியினால் மாட்டின் தலை பன்றியாக மாறியிருந்தது. அதன்பின் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் என்றுபெயர் பெற்றது. பங்குனி திங்கள் சிறப்பானது. பல ஊர்களிலும் இருந்து மக்கள் பொங்க வருவார்கள்.

6. சுட்டிபுரம் அம்மன் கோயில், சுட்டிபுரம் கோவிலிற்குச் தமிழ்நாட்டிலிருந்து சீர்காழி கோவிந்தராசன் வருகைதந்ததோடு மாத்திரமல்லாது அதன் மீது பாடல்களும் பாடியிருக்கிறார்.
7. அமெரிக்கன் மிசன் தொண்டர்களால் 1834 இல் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபை மக்களுக்கான வழிபாட்டிடமாகும். தென்மராட்சிப் பகுதியிலே இறைபணியினை ஆரம்பிக்கும் முகமாகச் சாவகச்சேரியினைத் தெரிவு செய்து அங்கு ஒரு திருச்சபையைத் தாபித்தனர். முன்பு அமெரிக்கன் இலங்கை மிசன் தேவாலயம் ஆக இருந்தது தற்போது தென்னிந்திய திருச்சபை ஆதீனமாக விளங்குகின்றது.
8. சாவகச்சேரியிலுள்ள இன்னுமொரு தேவாலயம் "சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயம்". இது ஒரு கத்தோலிக்கத் தேவாலயமாகும்.

அடுத்ததாக இங்கு அமைந்துள்ள பாடசாலைகளாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மட்டுவில் மகா வித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலயம், மகளிர் கல்லூரி ஆகியன காணப்படுகின்றன.

9. 1904 இல் சாவகச்சேரிச் சந்தைக்கு அண்மையில் ஒரு சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை வி. தாமோதரம்பிள்ளை என்பவரால் நிறுவப்பட்டது. பின்பு 1905 இல் சங்கத்தானைக்கு மாற்றப்பட்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையாக இருந்தது. 21-08-1989 இல் இருந்து ஆரம்ப பாடசாலை "இந்து ஆரம்ப பாடசாலை" என்ற பெயருடன் தனித்து இயங்கத் தொடங்கியது.
10. சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி நகரத்தில் கண்டி வீதியில் அமைந்திருக்கும் பாடசாலை ஆகும். இங்கு இடைநிலை, உயர் தரம் வரையில் கல்வி கற்பிக்கப்படுகிறது. அதாவது தரம் 6 முதல் தரம் 13 வரையான வகுப்புகளுடன் இயங்கிவருகின்றது. இப் பாடசாலை தென்மராட்சியில் இருக்கும் ஒரே ஒரு தேசிய பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது.
11. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்காக இலங்கை வந்த அமெரிக்க மிசனைச் சேர்ந்தவர்கள் 1875 ஆம் ஆண்டில் "டிறிபேக் ஆங்கிலப் பாடசாலை" என்ற பெயரில் இப்பாடசாலையை நிறுவினர். அக்காலத்தில், தென்மராட்சி நீதிமன்றத்தில் காவல்துறை நீதவானாகப் பணியாற்றிய ஜேம்சு இசுடுவர்ட் டிறிபேக் என்பவர் இதற்குத் தேவையான நிதியின் பெரும் பகுதியை வழங்கினார். இதன் காரணமாகவே இப்பாடசாலைக்கு அவருடைய பெயர் இடப்பட்டது.
12. சாவகச்சேரி மகளிர் கல்லூரியானது தென்மராட்சி பிரதேசத்திலுள்ள ஒரே ஒரு பெண்கள் கல்லூரி எனும் பெருமைக்குரியதாகும். அன்றைய சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் உயர்திரு வேலுப்பிள்ளை குமாரசாமி அவர்களின் அரும் பெரும் முயற்சியினால் 1952 ஆம் ஆண்டு இக்கல்லூரி உதயமானது.

அந்த வகையில் முதலாவதாக சாவகச்சேரியில் பல்வேறு பொதுச்சொத்துக்கள் மக்கள் தேவையிலும் நகர அபிவிருத்தியிலும் செல்வாக்கு செலுத்துகின்றன.

13. சாவகச்சேரி சந்தையில் மரக்கறிச் சந்தை, பழங்களுக்கான பகுதி, வெற்றிலைகள் விற்கும் பகுதி, தேங்காய்ச் சந்தை, மீன் சந்தை, இறைச்சிக் கடைகள், பலசரக்குக் கடைகள், உடுப்புக் கடைகள், அழகுசாதனப் பொருட்கள், பனை உற்பத்திப் பொருட்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்கள் போன்றனவற்றை ஒவ்வொரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தென்மராட்சியில் விளைவிக்கப்படும் மரக்கறிகள், பழவகைகள், தேங்காய்கள், பனை உற்பத்திப்

பொருட்கள் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்துவதற்கு பெரிதும் உதவுவது சாவகச்சேரி சந்தையாகும்.

14. இலங்கையின் மிக நீண்ட தொடருந்து சேவையான கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை நடைபெறும் தொடருந்து சேவை வலையமைப்பில் நாவற்குழி, மீசாலை தொடருந்து நிலையங்களுக்கிடையில் சாவகச்சேரி மற்றும் சங்கத்தானை ஆகிய இரண்டு தொடருந்து நிலையங்கள் அமைந்துள்ளன.
15. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையானது தென்மராட்சிப் பகுதியிலுள்ள மக்களின் மருத்துவ தேவைகளைப் பூர்த்திசெய்து வருகின்றது. இந்த ஆதார வைத்தியசாலையால் பல நோயாளிகள் நன்மையடைகிறார்கள்.
16. தென்மராட்சி கலை மன்றத்தின் கலாசார மண்டபமானது சிவன் கோவிலுக்கு அருகே அமைந்துள்ளது. தென்மராட்சியில் வாழும் கலைஞர்கள் மற்றும் படைப்பாளிகள் தங்களது படைப்புகளை வெளிக்கொண்டுவரும் மேடையாக தென்மராட்சி கலைமன்றம் விளங்குகின்றது.

இவ்வாறு நீண்டதொரு வரலாற்றை தன்னகத்தே கொண்டதும் நிறுவன மற்றும் ஆளுமை ரீதியாக ஆவணப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடும் உடையதொரு இடமாக சாவகச்சேரி விளங்குகிறது. அந்த வகையில் இவ்விடம் தொடர்பான அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து அவற்றை ஆவணப்படுத்துவதன் முக்கியத்தை நூலக நிறுவனம் அடையாளம் கண்டுள்ளதோடு அவற்றை தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு பயனளிக்கும் வகையில் ஆவணப்படுத்துவதன் அவசியத்தையும் உணர்ந்துள்ள அடைப்படையில் இதனை ஆவணப்படுத்துவதற்கான நியாயப்பாடு அவசியமாகிறது.

இலக்குகளும் நோக்கங்களும்

சாவகச்சேரி ஆவணப்படுத்தல் செயற்றிட்டமானது பின்வரும் இலக்குகளையும் நோக்கங்களைக் கொண்டுள்ளது

.

சாவகச்சேரி தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தலும் **(collecting and linking information sources and data about a village)** பண்பாட்டு பேணலுக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்று ஆய்வுக்கும் பயன்படக் கூடிய வகையில் ஆவணப்படுத்தல் **(documentation)**, ஆவணகப்படுத்தல் **(archiving)**, அணுக்கப்படுத்தல் **(providing open access)**

1. வரலாறு மரபுரிமை தொடர்பான விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் மேம்படுத்தி சாவகச்சேரி ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தல்
2. ஊரின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த ஊரின் முக்கிய வளங்களை (resources), அமைப்புக்களை (organizations), மனிதர்களை (people), தேவைகளை (needs) அடையாளம் கண்டு ஆவணப்படுத்தல்.
3. ஊரிலே இருக்கின்ற சமூக ஏற்றத்தாழ்வுகள், கலாசாரப் பன்மைத்தன்மை போன்றவற்றினையும் அவற்றினது வரலாற்றினையும் வெளிக்கொண்டு வருதல்.

செயற்பாடுகள்

- செயற்திட்ட வடிவமைப்பு (Project Design)

பங்குத்தாரர்களின் உள்ளீட்டைப் பெற்று, ஒத்த செயற்திட்டங்ளை மீளாய்ந்து, செயற் திட்டத்தை செழுமைப்படுத்தல். இந்தச் செயற்பாட்டின் விளைவாக துல்லியமான செயற் திட்டம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளலாம் .

- சந்திப்புக்கள்/நிகழ்வுகள்/பயிற்சிப் பட்டறைகள்

  கோப்பாய் வாழ் மக்கள் ஊடான சந்திப்புக்கள், நிகழ்வுகள் ஊடாகவே சாவகச்சேரி தொடர்பான ஆவணப்படுத்தலை சாத்தியபடுத்தலாம். மேலும், சாவகச்சேரி மக்களை அவர்கள் தொடர்பான ஆவணப்படுத்தலில் ஈடுபட வைப்பதும், அதற்கான ஆளுமையை கூட்டுவதும் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கங்களில் அடங்கும். அதற்கு பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்தல், உள்ளீடு தன்னார்வலர்களை ஊக்கப்படுத்தல் போன்ற பணிகள் வலுச்சேர்க்கும்.

- தகவல் வளச் சேகரிப்பும் எண்ணிமப் பாதுகாப்பும் (Collection Development & Digital Preservation)

  சாவகச்சேரி மக்களால் வெளியிடப்பட்ட சாவகச்சேரி தொடர்பான தகவல் வளங்களை கண்டறிந்து, அனுமதி பெற்று, எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து, இணையம் ஊடாக வெளியிடல். குறிப்பாக எத்தனை வளங்கள் இவ்வாறு கிடைக்கும் என்பதை முன்கூட்டியே கணித்தல்

- களப் பணிகளும் பல்லூடக ஆவணப்படுத்தலும் (Field Work & Multimedia Documentation)

  களப் பணிகள் ஊடாக உருவாக்கப்படும் வளங்கள் process செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வெளியிடப்படும்.
    - பல்லூடகப் பதிவுகளைச் சேகரித்தல், எண்ணிமப்படுத்தல்
    - ஒளிப்படங்கள் எடுத்தல்
    - காணொளிப் படப் பிடிப்பு
    - வாய்மொழி வரலாறுகள்

- தரவுத் தொகுப்புகள் (Data Sets)

  மேற்குறிப்பிடப்பட்ட secondary மற்றும் primary தரவுச் சேகரிப்புக்களின் ஊடாகப் பெறப்படும் தரவுகளை கட்டமைப்பான தரவுகளாக (structured data) ஆக மாற்றித் தொகுத்தல்.
    - புள்ளிவிபரங்கள் (மக்கள் தொகையியல், கல்வி, நலம், பொருளாதாரம்)
    - இடங்கள்
    - இயற்கை வளங்கள்
    - தொல்லியல் களங்கள்
    - திறவு நபர்கள்
    - நிறுவனங்கள்

விளைவுகள்

| இலக்கு | நோக்கங்கள் | செயற்பாடுகள் | விளைவுகள் |
|---|---|---|---|
| ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தலும் **(collecting and linking information sources and data about a village)** பண்பாட்டு பேணலுக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்று ஆய்வுக்கும் பயன்படக் கூடிய வகையில் ஆவணப்படுத்தல் **(documentation),** ஆவணகப்படுத்தல் **(archiving),** அணுக்கப்படுத்தல் **(providing open access)** | ஊரின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த ஊரின் முக்கிய வளங்களை (resources), அமைப்புக்களை (organizations), மனிதர்களை (people), தேவைகளை (needs) அடையாளம் கண்டு ஆவணப்படுத்தல். | சாவகச்சேரி வாழ் மக்களுடன் சந்திப்புக்களை மேற்கொள்வதோடு அங்கு நடைபெறும் நிகழ்வுகளில் பங்குபற்றி தகவல்களை சேகரித்தல் | சாவகச்சேரி ஊர் தொடர்பான ஆவணப்படுத்தப்பட்ட விடயங்களை தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினர் பயன்படுத்துதல் |
| | வரலாறு மரபுரிமை தொடர்பான விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் மேம்படுத்தி சாவகச்சேரி ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தல் | சாவகச்சேரியில் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகள், அமைப்புக்கள், நிறுவனங்கள், வளங்கள், நபர்களை அடையாளப்படுத்தி அவர்களிடம் காணப்படும் ஆவணங்கள் பெறுவதோடு பாரம்பரிய விடயங்களை பதிவுசெய்தல் | |
| | ஊரிலே இருக்கின்ற சமூக ஏற்றத்தாழ்வுகள், கலாசாரப் பன்மைத்தன்மை போன்றவற்றினையும் அவற்றினது வரலாற்றினையும் வெளிக்கொண்டு வருதல் | சாவகச்சேரியில் வாழ்கின்ற பல்வேறு வகைப்பட்ட மக்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தி ஆவணப்படுத்தல் செயற்பாட்டை மேற்கொள்ளுதல் | |

எதிர்பார்க்கப்படும் அடைவுகள்

ஒரு வருட காலப்பகுதிக்குள் இச்செயற்றிட்ட கள ஆய்வாளரால் சாவகச்சேரி தொடர்பான கீழ்க் குறிப்பிடப்படும் இலக்குகள் பூரணப்படுத்தப்பட்டு செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்படும்

| இலக்குகள் | அடைவு மட்டம் |
|---|---|
| ஆவணங்கள் | **600** |
| புகைப்படங்கள் | **120** |
| வாய்மொழி வரலாறுகள் | **48** |
| குறுங்கால ஆவணங்கள் | **240** |
| ஆளுமைக்குறிப்புகள் | **48** |
| நிறுவனக்குறிப்புகள் | **60** |
| நிகழ்வுகளை பதிவிடல் | **24** |

எதிர்பார்க்கப்படும் சவால்களும் தீர்வுகளும்

- சாவகச்சேரி ஊர் ஆவணப்படுத்தலானது எதிர்கால ஆய்வுகளுக்கு பயன்படும் வகையில் மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்றிட்டமாகும் . அந்த வகையில் தரவுகளை இனங்கானுதல், சேகரித்தல் மற்றும் ஆவணப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் அதிக காலம் எடுக்கக்கூடியவை . இது செயற்றிட்ட காலவரையினுள் செல்வாக்கு செலுத்துவதோடு பெரியதொரு சவாலாகவும் காணப்படுகிறது.

- செயற்றிட்டக்கருவிகள் செயற்றிட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. தற்போது இலங்கையில் நிலவி வரும் பொருளாதார நிலமையினை அடிப்படையாக வைத்து பார்க்கும் போது செயற்றிட்டத்திற்கான கருவிகள் இலங்கையில் கொள்வனவு செய்வது கடினமாக இருப்பதுடன் அவற்றிற்கான நிதித்தேவை அதிகரிப்பதும் சவாலாக உள்ளது.

செயற்றிட்டத்திற்கான பாதீடு

| Details of Expenditure | Unit | No of Units | No of Activity or Staff | Unit cost | Total | Noolaham Foundation Contribution | Donor Contribution |
|---|---|---|---|---|---|---|---|
| **Human Resources Cost 50%** | | | | | **1,605,296** | **511,700** | **1,093,596** |
| Field Researcher 100% | Staff | 100% | 12 | 60,000 | 720,000 | | 720,000 |
| Digital Preservation officer 100% | Staff | 50% | 12 | 50,000 | 300,000 | 300,000 | |
| Digital Library Officer (Quality Assurance ) 50% | Staff | 50% | 12 | 42,266 | 253,596 | | 253,596 |
| Digital Library officer (Metadata ) 25% | Staff | 25% | 12 | 10,567 | 31,700 | 31,700 | |
| Program and Project Manager 10% | Staff | 10% | 12 | 150,000 | 180,000 | 180,000 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Travel and Transport | Month | | 12 | 10,000 | 120,000 | | 120,000 |
| **Equipment 39%** | | | | | **1,242,400** | **500,000** | **742,400** |
| Lap | Nos | 1 | | 315,000 | 315,000 | | 315,000 |
| Canon DSLR Camera | Nos | 1 | | 279,900 | 279,900 | | 279,900 |
| A4 Scanner | Nos | 1 | | 210,000 | 210,000 | 210,000 | |
| Recorder | Nos | 1 | | 42,500 | 42,500 | | 42,500 |
| Computer | Nos | 1 | | 290,000 | 290,000 | 290,000 | |
| Hard disk | Nos | 1 | | 55,000 | 55,000 | | 55,000 |
| Triport | Nos | 1 | | 50,000 | 50,000 | | 50,000 |
| **Sub Total** | | | | | **2,847,696** | **1,011,700** | **1,835,996** |
| Adim Cost 11% | Month | 1 | 12 | 1,066,00 0.00 | 341,723 | | 341,723 |
| **GRAND TOTAL** | | | | | **3,189,419** | **1,011,700** | **2,177,719** |